[1973 மார்ச் 1]

திரு. அ. ஆறுமுகம் : விதவைகள் 70 வயதாக இருந்தால் உதவிப் பணம் கொடுக்கலாம் என்றார்கள். இந்த வயதைக் குறைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

(பதில் இல்லை.)

திரு. சு. துரைசாமி : விதவைகளுக்கு உதவிப் பணம் கொடுக்காவிட்டாலும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து வேலை வாய்ப்புக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விதவைகள் மட்டுந்தான் அதைச் செய்ய வேண்டுமென்றில்லை. எல்லோருமே அந்தத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பிக்கலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : விதவைகளுக்கு பென்ஷன் கொடுக்கும் திட்டம் இல்லையென்று சொன்னார்கள். அரசாங்க வேலையில் இருந்து திடீரென்று இறந்து விடுகின்றவர்களின் மனைவிகளுக்கு, விதவைகளுக்கு பென்ஷன் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசாங்கத்தில் பணியாற்றும் போது இறந்து விட்டால் குடும்பத்திற்கு என்னென்ன சலுகைகள் கொடுக்க வேண்டுமென்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. அதன்படி சலுகைகள் கொடுக்கப்படுகின்றன.

Ponds scheme in Erode Taluk

* 201 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether estimates have been received from the Public Works Department for the formation of ponds in Muthugoundanpalayam, Uthukuli and Veerachipalayam Thudupatti village, Perundurai of Erode taluk during 1971; and

(*b*) if so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி முத்துகவுண்டன்பாளையம், ஊத்துக்குளி, வீராச்சி பாளையம் குட்டைகள் அமைப்பதற்கான திட்டங்கள் பற்றியதாகும். இந்தத் திட்டங்கள் அந்தக் கிராமங்களின் பக்கத்தில் இருக்கின்றன. முத்து கவுண்டன்பாளையம் கிராமத்தினருகில் குட்டை அமைப்பதற்காக சுமார் 75,000

ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இதற்கு மாவட்ட ஆட்சியாளருடைய இசைவு எதிர்பார்க்கப்படுகிறது. விராச்சி பாளையத்தில் குட்டை அமைக்கும் திட்டத்திற்காக ரூ. 1,03,000 அளவில் திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இதற்கு மாவட்ட ஆட்சியாளர் இசைவு தந்திருக்கிறார். ஆய்வு முடிந்த பிறகு அரசாங்க அளவில் நடவடிக்கை எடுக்கப் படும். ஊத்துக்குளி கிராமத்தினருகே 21,000 ரூபாய் மதிப்பீட்டில் குட்டை அமைக்கும் திட்டம் ஈரோடு நிர்வாகப் பொறியாளரின் ஆய்வில் இருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் நீர் ஊற்றுக்கள்

* 202 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை **அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—**

தஞ்சை மாவட்டத்தில் விவசாய நிலங்களில் நீர் ஊற்றுக்களைக் கண்டு பிடிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தஞ்சை மாவட்டத்தில் . . . .

(சில உறுப்பினர்கள் குறுக்கே நடந்து சென்றனர்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரத்தின்போது உறுப் **பினர்கள் குறுக்கே போகக் கூடாது. உறுப்பினர் என்ன கேட்கிறார் என்பது** சரியாகக் கேட்கவில்லை.

திரு. என். கிட்டப்பா : தஞ்சை மாவட்டத்தில் தற்போது குடந்தை தாலுகாவில் பந்தநல்லூர் பகுதியில் ஆர்டிவியன் வெல்கள் கண்டு பிடிக்கப் பட்டிருக்கின்றன. இதனால் கோடை காலத்தில்கூட நிறைய **தண்ணீர்** வழங்கக்கூடிய நிலைமை இருந்து வருகிறது. எனவே, தஞ்சை மாவட்டத்தின் பிற பகுதிகளுக்கும், குறிப்பாக மாயூரம், சீர்காழி போன்ற தாலுகாக்களுக்கும் இதை விரிவுபடுத்தி உடனடியாக செயல்படுத்த அரசாங்கத்திடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா ? செயற்குறிப்பு இல்லையெனில் உடனடியாக அமல் படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நில நீர் ஆய்வுப் பணிகளின் மூலம் தஞ்சை மாவட்டத்தில் நீர் ஊற்றுக்களைக் கண்டுபிடிக்கும் திட்டம் பொதுப்பணித் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவை யுனைடெட் நேஷன்ஸ் டெவலப்மெண்ட் ஆர்கனைசேஷன் மூலம் பரிசீலிக்கப்பட்டு அறிக்கை தயாரித்திருக்கிறார்கள். அந்த அறிக்கை இன்னும் நமக்குக் கிடைக்கவில்லை.